# The Tragedy of Silence

— OR —

# THE RAJPUT HERO

## A TAMIL DRAMA

BY

*Rao Saheb P. SAMBANDAM,* B.A., B.L.,

Author of

"The Two Sisters," "The Bandit Chief," "True Love," "Manohara," "Blind Ambition," "The Demon Land." "Fate and Love" "Sarangadhara," "The Fair Ghost," "Galava," "Amaladitya," "Magapathi," "Ratnavali," "The Two Friends," "The Golden Fetters," "Farces," "The Good Fairy," "Markandeya," "Simhalanatha," "The Merchant of Vanipura," "The Wedding of Valli," "The Eye of Love," "Siruthondar," "As you like it," "Pushpavalli," "Vijayarangam," "Lord Buddha," "Sabapathy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," 'The Curse of Oorvasi," etc in Tamil, and "Harischandra," and 'Yayathi' - - - - - in English. - - - - - -

**SECOND EDITION**

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS," 21, Sunkurama Chetty Street.

1922.

*All Rights reserved.)*

**(Price per Copy As. 0-14-0**

உ

# ராஜபுத்ர வீரன்

இந்த தமிழ் நாடகம்

ராவ் சாஹெப்

**ப. சம்பந்த முதலியார்**, பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நாடகங்கள் :—
"லீலாவதி சுலோசனை," "கள்வர் தலைவன்," "மனோஹரன்."
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "வேதாள உலகம்,"
"சத்ருஜித்," "யயாதி," "காலவரிஷி," "அமலாதித்யன்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி,"
"மார்க்கண்டேயர்" "நற்குல தெய்வம்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே," "பொன் விலங்குகள்," "ரத்னாவளி,"
"வாணீபுர வணிகன்," "சிறுத்தொண்டர்." "ஹரிச்சந்திரன,"
"மெய்க்காதல்," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "சபாபதி,"
"பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம." "விஜயரங்கம்,"
"முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்," "வள்ளி மணம்,"
"புத்த அவதாரம்" முதலியன.) :: :: :: :: ::

இரண்டாம் பதிப்பு

சென்னை :

டௌடன் கம்பெனியாரின்

"பியர்லெஸ்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

**1922.**

காபி ரைட் செய்யப்பட்டிருக்கிறது.]

[விலை அணா 0-14

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY PARENTS**

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL.

# Preface to the First Edition

This piece was written for the last day's celebration of the Dasara by the Suguna Vilasa Sabha this year, and if I may be permitted to say so myself, it almost created a sensation. The Editor of a leading newspaper in Madras wrote very highly of the performance, and suggested that it should be performed right through India, in order to revive the martial spirit of the people. Hence I have been induced to print it, small as it is. For the benefit of my readers I print below the synopsis of the drama as printed at the first performance.

SCENE I.—**The Ramparts of Chittore**—Bahadur Shah of Guzerat having invested Chittore, the Rana-regent Vikramajit, after many vain sorties, sends at last his Sirdar Ranavir, who has sworn that he would either come back with the head of the leader of the opposing army, or never return at all from the battle field. The Rana and his few remaining followers watch the fight from the ramparts. Zynulabdin a musalman spy—who in the guise of a Rajput had followed Ranavir, kills from behind Ranavir's horse, and a cry is raised that Ranavir has fallen. The Rana prays for his success. Ranavir having extricated himself, vanquishes in single combat Abdul Kharim the Musalman General. The Rana receives Ranavir with due honors. A Council of war is held, and the Rana decides that the ladies should perform the Johar (a ceremony in which the ladies clad in yellow garments ascend the funeral pyre), early next morning, and that the Rajput warriors should put on their yellow robes. (Once a Rajput puts on his yellow robes, he goes out to fight the enemy, never to return alive) Ranavir at this juncture, asks as a boon that the young Rana Udai Singh, should be spared to keep up the

race of Kshatriyas. The boon is granted and the young Rana Udai Singh, a boy of tender years, is brought and formally installed as the Rana, and entrusted to the care of Ranavir to be smuggled out of Chittore.

SCENCE II.—**Ranavir's house**—Ranavir's wife and his blind mother are anxiously waiting for news about Ranavir. Ranavir's son Pratap, who had run out of the house to see the fight, contrary to his parents' directions, returns with news of his father's victory. He is punished by his strict mother for having played the truant, and then rewarded for the good news. Ranavir enters with the young Rana, who is received with due honors. Ranavir pays his respects to his mother, and confers with her as to how to smuggle the young Rana out of Chittore. His heroic wife suggests that their son and the Rana should exchange dresses, and that when the Rajputs make their last sortie the next morning, she should carry her own boy in the Rana's robes, and that her mother-in-law with a trustworthy servant should be in charge of the real Rana, and that if she is caught with the false Rana an opportunity will be given to the real Rana to escape. Ranavir and his blind mother hail it with delight, as the best means of serving their chief.

SCENE III.—**The Eastern entrance of Chittore Fort.** The Rajput warriors are assembled in their yellow robes, prior to their last sortie. The last beera (betel preparation) is passed round according to Rajput custom. The Rajput ladies covered with yellow clothes pass out to the funeral pyre, to the strains of music. The few remaining chiefs take an affectionate farewell of the Regent Vikramajit. The Eastern gate is ordered to be thrown open, and Vikramajit and his devoted followers, hurl themselves on the enemy with their war—cry, never to turn back. Ranavir alone is left to guard the gate till the last moment, to give time to the young Rana to escape.

SCENE IV.—**The Battlements of Chittore.** Bahadur Shah having taken Chittore, orders a search for the young Rana. Zynul, the Musalman, informs him that Ranavir must have hidden him somewhere. Ranavir is tortured to reveal the Rana's hiding place, his right hand being cut off. Ranavir remains silent. Ranavir is brought before Bahadur Shah, and the king promises him the Ranaship if only he would reveal the Rana's whereabouts. To all his threats Ranavir remains mute. A shout is raised that the young Rana has been captured; and Pratap (Ranavir's son) is brought as a captive before Bahadur Shah. Zynul tells the king that it is not the real Rana, and that he is the son of Ranavir in the Rana's robes. Bahadur Shah declares that he will have the boy punished unless Ranavir reveals his secret. The brave boy is taken to a fire to be branded with red hot irons, but undaunted, jumps into the fire, with a last word to his father. Secret information is brought to Bahadur Shah, that the mother and wife of Ranavir have been taken prisoners. He orders the mother to be brought before him, and threatens Ranavir to kill his mother if he would not divulge his secret. The blind mother goes to her son on pretence of inducing him to consent to do so, and drawing the secret dagger which every Rajput lady carries about her person to save her honour, stabs herself to death, warning her son with her last breath to be true to his Rana. And finally Bahadur Shah orders Chandra Bai, the wife of Ranavir, to be brought and placed before him, and threatens to put Ranavir to death before her eyes, and then take her to his harem, unless Ranavir divulges the hiding place of the Rana. Just then by means of a preconcerted signal, Ranavir learns that the boy Rana had been safely taken out of the city; and on a secret sign from her husband, Chandra Bai, on pretence of revealing to the Musalman king the secret hiding place of the Rana, ascends the battlements and with a last appeal to her husband to be true, jumps down from the precipitous walls and dies. In the confusion that follows, Ranavir frees

himself from his guards and stabs to death the traitor Zynul. Thereupon the exasperated Musalmans smother him with their arms, and he breathes his last. Bahadur Shah, orders him an honourable funeral, and remarking that if he had a hundred Ranavirs who would sacrifice their all in all in his service he would become the Emperor of all India, follows the funeral cortege as the chief mourner of the Rajput who sacrificed his son, mother, and wlfe, and his own life, for saving his Rana.

The above plot is based on the second sack of Chittore. I have taken great liberties with the historical facts, the characters of Ranavir and his family being my creations, but I may mention that every incident I have made use of has its original in Rajput history.

I have added at the end explanations of certain Hindustani expressions used in this drama which I trust the reader will find useful.

"PAMMAL LODGE"
MADRAS.

THE AUTHOR.

---

N. B.—All societies, both Amateur and Professional will note that my formal consent is necessary before staging this or any other drama of mine.

# ரஜபுத்ரவீரன்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பஹதூர்ஷா | ... ... | குர்ஜரத்து மஹம்மதிய அரசன் |
| விக்ரமஜித் | ... ... | சித்தூர் ராணு |
| உடைசிங் | ... ... | இளைய ராணு, விக்ரமஜித்தின் தமயன் குமாரன் |
| பீம்சிங்<br>அஜீத்சிங்<br>ரணவீர்சிங் | ... ... | ரஜபுத்ர தளகர்த்தர்கள் |
| ஜைனுலாப்தீன் | ... ... | புட்டு என்கிற பெயருடன் ரஜபுத்ர வேஷம்பூண்ட ஓர் மஹம்மதியன் |
| பிரதாப் | ... ... | ரணவீர்சிங் மகன் |
| ஜ்வாலாபாய் | ... ... | ரணவீர்சிங் தாயார் |
| சந்திராபாய் | ... ... | ரணவீர்சிங் மனைவி |

ரஜபுத்ர தளகர்த்தர்கள், மஹம்மதிய சர்தார்கள்,
சேவகர்கள், ரஜபுத்ர ஸ்திரீகள்
முதலியோர்.

---

கதை நிகழிடம் :—சித்தூர் கோட்டை.

# ரஜபுத்ரவீரன்

## முதல் அங்கம்

### முதல் காட்சி

இடம்—சித்தூர் கோட்டை அலங்கம்.

காலம்—சூர்யாஸ்தமனம்.

கோட்டைக்கு வெளியில் யுத்தம் நடக்கிறது.

*துலுக்க சைனியங்கள் தீன் ! தீன் ! என்று கூவிக்கொண்டு எதிர்க்கின்றன.*

*ரஜபுத்ர சைனியங்கள் மாரோ ! மாரோ ! என்று கூவிக்கொண்டு அவர்களைத் தடுக்கின்றனர்.*

*—விக்ரமஜித்ராணா, பீம்சிங், அஜீத்சிங், முதலியோர் பரிவாரங்கள்சூழ அலங்கத்தில் நின்றுகொண்டு தங்கள் ஜாதி வீரர்களை உற்சாகப்படுத்துகிறார்கள்.*

வி. ஷாபாஷ் ! ரஹதோர் ! ஷாபாஷ் ! ஜாலோர் !

பீ. ஷாபாஷ் ! ராஜ்வாரா ஷாபாஷ் !

அ. ஷாபாஷ் ! ஷாபாஷ் ! சோஹன் !

மூவரும். ரணவீர் ! ஷாபாஷ் ! ஷாபாஷ் !

பீ. ஓடுகிறார்கள் ! ஓடுகிறார்கள் !

அ. துறத்துங்கள் ! துறத்துங்கள் ! விடாதீர்கள் ! விடாதீர்கள் !

வி. வஹ்வா! வஹ்வா! ரணவீர்! ரணவீர்! மாரோ! மாரோ!

மற்றவர். மாரோ! மாரோ!

வி. ரணவீர்! விடாதே அப்துல்கரீமை! விடாதே!

பீ. அடடா! புட்டுவைப் பார்! புட்டுவைப் பார்! ரணவீர் சிங்கைப் பின்னால் எதிர்க்கிறானே!

அ. ரணவீர்! ரணவீர்! பின்னால்பார்! பின்னால்பார்!

வி. ஹா! துரோகி! துரோகி!—கொல் அவனை முன்பு! கொல் அவனை முன்பு!—வஹ்வா வஹ்வா! செத்தான் பாபி! செத்தான் பாபி!—இதற்குள்ளாக அப்துல்கரீம் தப்பி ஓடுகிறான்! ஓடுகிறான்!—இல்லை! இல்லை! ரணவீர் சிங் அம்பினால், அவன் குதிரை காயப்பட்டு விழுகிறது! விழுகிறது!—ஷாபாஷ் ஷாபாஷ்! ரணவீர் துறத்துகிறான் துறத்துகிறான்! அகப்பட்டான் அப்துல்கரீம்!

மற்றவர். ஷாபாஷ்! ரணவீர்! ஷாபாஷ்! ரணவீர்!

வி. பொறுங்கள்! பொறுங்கள்!—என்ன! ரணவீரின் குதிரைக்கு காயம்பட்டதா என்ன? இல்லை! இல்லை! குதிரையைவிட்டு கீழே இழிந்து சண்டை போடுகிறான்! வஹ்வா! ரணவீர் நீயே சுத்தவீரன்! நீயே ரஜபுத்ரன்!

பீ. ராணாஜி! அதோ பாரும்! இருவர்களுடைய வாட்களினின்றும் பொறிகள் பறக்கின்றன!

அ. அவனும் சாமான்யமானவனல்ல!—எப்படி முடியுமோ? பவானி மாதாதான் துணை செய்யவேண்டும் நமக்கு!

வி. பவானி மாதா! ரணவீர் ஜெயிப்பானாக!

[ஒருபுறம் சென்று பணிகிறான்.]

மற்றவர். பவானி மாதா! பவானி மாதா!

பீ. ஐயோ! வீழ்ந்தான்! வீழ்ந்தான்!

வி. யார்? யார்?

பீ. ரணவீர்!—இல்லை! இல்லை! எழுந்திருக்கிறன் எழுந் திருக்கிறன்!— ஓடுகிறன் அப்துல்கரீம்!— பிடித்துக் கொண்டான் ரணவீர்!—அவன் செத்தான்! செத்தான் அப்துல்கரீம்!

வி. யார்? யார்?

பீ அப்துல்கரீம்! அப்துல்கரீம்! செத்தான்!

வி. [எழுந்து பார்த்து] ஜெய் பவானிமாதா!

மற்றவர் ஜெய் பவானிமாதா!

அ. அவன் கழுத்தை வெட்டிவிட்டான் ரணவீர்!

வி. ஜெய்! ரணவீர்! ஜெய்! ரணவீர்!

மற்றவர். ஜெய்! ரணவீர்! ஜெய்! ரணவீர்!

அ. வஹ்வா! பறக்கிறர்கள் மஹம்மதியரெல்லாம் திரும்பிப் பாராது! இனி ஜெயம் நம்முடையதே! சந்தேகமில்லை! சந்தேகமில்லை!

பீ ரணவீர்சிங் கரீம் தலையை கையில் எடுத்துக் காட்டு கிறன் காட்டுகிறன்! ராண மஹாராஜ்! ஜெயம் இன் றைத்தினம் நம்முடையதுதான்!

வி. பவானிமாதா! எல்லாம் உம்முடைய கருணை! இனி நான் சுகமாய் இறப்பேன்! என் பட்டணம் ஜெயிக்கப்பட்டா லும் படட்டும், என் பதினேரு பிள்ளைகளைக் கொன்ற அப்துல்கரீம் மடிந்ததை என் கண்ணுற் பார்த்தேனே! அவ்வளவே போதும்! சூர்யன் சாய்ந்துவிட்டான், இனி சண்டையை நிறுத்துவோம்— நமது மிகுந்த சைனியங் கள் திரும்பும்படி நகாரா முழங்கட்டும்.

அ. உத்தரவு ராணுஜீ—அடே, சைனியங்கள் திரும்ப நகாரா முழங்கச் சொல்.

[ஒரு சேகவன் போகிருன்-வெளியில் நகாரா முழங்குகிறது.]

வி. வஹ்வா ! என் பிள்ளைகளெல்லாம் பழி தீர்க்கப்பட்டார்கள் ! காலையில் மடிந்த பாக்ஜியும் பழி தீர்க்கப்பட்டான் ! நீங்கள் போய் ரணவீரை இங்கே அழைத்து வாருங்கள் விரைவில்.

ர ராணுஜி, அதோ வருகிருன் படியேறி அலங்கத்திற்கு.

வி. நகாரா பஜாவ் !

அ. நகாரா பஜாவ் !

[நகாரா அதிகமாய் முழங்குகிறது.]

ரணவீர்சிங் கரீம் தலையை எடுத்துக்கொண்டு மெல்ல வருகிருன்.

வி. ஜெய் ரணவீர் !

எல்லோரும். ஜெய் ரணவீர் ! ஜெய் ரணவீர் !

வி. ஷாபாஷ் ! ரணவீர் ! ஷாபாஷ் ! நீயே சுத்த வீரன் !

[ரணவீர்சிங் ராணுவுக்கு முழந்தாளிடப் போகிருன்.]

ரணவீர், முழந்தாளிடாதே ! இன்று முதல் நீயும் உனது பரம்பரையாரும் ராணுக்களுக்கு எப்பொழுதும் முழந்தாளிட வேண்டியதில்லை. இந்த கௌரவத்தை உனக்கு இன்று கொடுத்தோம், நீ செய்த சாஹசத்தின் பொருட்டு.

ர. ராணு மஹாராஜ் ! தங்கள் சித்தம் !

[ராணுவின் கையைக் கண்ணில் பொத்தி முத்த மிடுகிருன்.]

ராணுஜி, இதோ இன்று காலை நான் செய்த சபதத்தை நிறைவேற்றினேன் !

[அப்துல்கரீம் தலையை ராணுவின் காலில் போடுகிறான்.]

வி. ஷாபாஷ் ! ரணவீர் ! நிறைவேற்றினாய் ! நிறைவேற்றினாய் ! நிறைவேற்றினாய் ! என் பிள்ளைகளைக் கொன்றதற்குப் பழி தீர்த்தாய் !

[அவனைத் தழுவிக் கொள்ளப் போகிறான்.]

ர. [அதைத் தடுத்து] ராணுஜி என் மார்பில் காயம்பட்டு ரக்தமாயிருக்கிறது.

வி. ரணவீர் ! அந்த ரக்தம் என் மார்பிலும் படட்டும்.

[அவனைத் தழுவிக்கொண்டு]

ரணவீர், நான் இதுவரையில் அணிந்திருந்த மாணிக்க வைடூர்ய பதக்கங்கள் எல்லாவற்றையும் விட, என் பொருட்டு உன் உயிரை ஹானியிற்படுத்தி ஜெயித்து வந்த உன் ரக்தம் படிந்த குறியே, எனக்கு விலையிலா பூஷணமாம். இந்த உன் உதிரமானது என்னுடைய இந்த சட்டையினின்றும் என்றும் கழுவக்கூடாது என்று கட்டளை யிடுகிறேன்.

மற்றவர். வஹ்வா ராணு மஹாராஜ் ! வஹ்வா ராணு மஹாராஜ் !

வி. ரணவீர்,—உனக்கே அப் பெயர் தகும் !—இந்த சபதத்தை முடித்ததற்காக, என்னிடம் வேண்டிய வரத்தைக் கேள், தருகிறேன்.

ர. ராணுஜி, என் சபதத்தை நிறைவேற்றியதே எனக்குப் போதுமான கைம்மாறு; வேறென்ன வேண்டும் ரஜபுத்ர க்ஷத்ரியனுக்கு ?

வி. உண்மையே, ஆயினும் நீ என்னிடம் ஏதாவது பெறவேண்டும், இல்லாவிட்டால் அது எனக்கு அவமரியாதையாகும்.

ர. ராணுஜி, கோபம் வேண்டாம் அப்படியானல் கொஞ்சம் பொறுத்து யோசித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வி. அப்படியே செய், மறக்காதே—ரணவீர்! என்ன! உன் கையிலும் காயம்பட் டிருக்கிறற்போ லிருக்கிறதே!

ர. ஆம் ராணுஜி, இனி என் வலக்கை—உபயோகப்படாது! அப்துல்கரீம் வெட்டின வெட்டில் மணிக்கட்டு உடைந்து விட்டது!

வி. அவ்சோஸ்! அவ்சோஸ்! ரணவீர்! உன்னை எவ்வளவோ நம்பி யிருந்தேன். உனக்கும் இக்கதி வாய்த்த பிறகு வேறென்ன இருக்கிறது!—நேற்றைத்தினம் இரவு நான் கண்ட கனவு மெய்யாகும்போ லிருக்கிறது! இனி யோசிப்பதிற் பய னில்லை. நாளைத்தினம் காலை பஹதூர்ஷா, மறுபடியும் நமது கோட்டையை எதிர்ப்பானுயின் அவனுடன் யுத்தம் செய்து வெல்ல வல்லவர் யாரிருக்கிருர்கள்?—அஜீத், மிகுதியா யிருக்கும் ரஜபுத்ர தளகர்த்தர்களை வரவழை என் முன்பாக.

அ. ராணுஜீ, முன்பே சொல்லி யனுப்பி யிருக்கிறேன்—இதோ வருகிருர்கள்.

இரண்டு தளகர்த்தர்கள் வருகிருர்கள்.

வி. என்ன! இரண்டு பெயர்தானு?—ஆக மொத்தம், நீங்கள் இரண்டுபெயர், அஜீத், பீம்சிங், ரணவீர்—ஐந்து பெயர்! அறுபது தளகர்த்தர்களில் ஐந்து பெயர் மிகுந்திருக்கிறீர்கள்! அவ்சோஸ்!—நம்முடைய சைனியங்களில் மிகுந்தவை எத்தனை?

அ. மரணகாயம் பட்டவர்கள் போக சுமார் எழுநூற்றைம்பது வீரர்கள்தா னிருக்கிருர்கள்.

வி. இருந்தும், ரணவீர்! உன் வலக்கை மாத்திரம் சரியாக இருந்தால், நான் இப்பொழுது உங்களுக்குத் தெரிவிக்கப்போகிற தீர்மானத்திற்கு வரமாட்டேன்!—எல்லாம் ஏகலிங்கன் செயல்! நாம் என்ன செய்யலாம்?—ரஜபுத்ர தளகர்த்தர்களே! இனி நாம் செய்யவேண்டிய கடமை ஒன்றுதா னிருக்கிறதென நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

மற்றவர். ஆம் ராணாஜீ! வேறு வழி யில்லை.

வி. ஆனால், நாளைத்தினம் சூர்ய உதயத்திற் கெல்லாம், நமது குல ஆசாரப்படி, மஞ்சள் ஆடை யணிந்து, பூஜையை முடித்து, கிழக்கு வாயில் வழியாகச் செல்வோம்—சுவர்க்கத்திற்கு!

மற்றவர். [தங்கள் வாட்களை வீசி] ராணாஜி! ஆம்! வீர சுவர்க்கத்திற்கு ஒன்றாய்ச் செல்வோம்!

வி. ஆயினும் ஒரு வார்த்தை. நான் கட்டாயப்படுத்துகிறேன் என்று எந்த ரஜபுத்ரவீரனும் நினைக்கவேண்டாம், ரஜபுத்ர ஸ்திரீயும் நினைக்கவேண்டாம். பட்டணத்தி லுள்ளவர்களை யெல்லாம் வரவழைத்து இதைத் தெரிவியுங்கள். சத்தியாக விருப்பமில்லாத எந்த ஸ்திரீயும் அக்கினிப் பிரவேசமாக வேண்டியதில்லை. மஞ்சள் ஆடையைப் பூண விருப்பமில்லாத எந்த ரஜபுத்ரனும் எனக்காக அதை அணியவேண்டியதில்லை. அவர்கள் எல்லாம் இன்றைத்தினமே இப் பட்டணத்தைவிட்டு ராத்திரியில் தப்பிச் செல்லலாம்.

ர. மானத்தை விட்டு தன் அற்ப பிராணனை அதிகமாக மதித்து, அப்படித் தப்பப் பார்க்கும் ரஜபுத்ரனை, நான் கொஞ்சம் என் கண்ணால் பார்க்கவேண்டும்.

வி. ரணவீர்! அது நியாயமன்று நீ எவரையும் கட்டாயப் படுத்தாதே! என் ஆணை! அவனவன் இச்சைப்படி செய்

யட்டும். இனி நாம் ஏகலிங்கன் கோயிலுக்குப் போய்ப் பணிந்துவிட்டு, நாளை காலை செய்யவேண்டிய கடமைக்கு ஏற்பாடு செய்வோம்.

ர. ராணாஜி, ஒரு நிமிஷம்! தயவு செய்யவேண்டும்.

வி. என்ன ரணவீர்?

ர. முன்பு தாம் கொடுக்க ஒப்புக்கொண்ட வரத்தை இப்பொழுது கேட்கிறேன்.

வி. என்ன வேண்டும்? கேள் சீக்கிரம், தருகிறேன்.

ர. ராணாஜி, என்மேல் கோபிக்கக்கூடாது. சிறு குழந்தையாகிய இளைய ராணாவை இக் கட்டளைக்கு உள்ளாக்கக் கூடாது. எப்படியாவது தாங்கள் பலவந்தப்படுத்தியாவது, கர்ணவதி தேவியவர்கள் அக்கினிப் பிரவேசமாகும்பொழுது, அக் குழந்தையை உடன் கொண்டு போகா திருக்கும்படிச் செய்யவேண்டும். திரேதாயுகத்தில் ராம்தேவ் முதல் விளங்கிவரும் இச் சூர்ய வம்சம் அற்றுப் போகாதபடி, அக் குழந்தையின் உயிரை மாத்திரம் காப்பாற்றவேண்டும். இதுதான் நான் வேண்டும் வரம். இதைத் தாங்கள் மறுக்கலாகாது.

வி. ரணவீர்! என்ன கேட்டாய்! அவன் மாத்திரம் இப் பாதகர்கள் கையிலகப்பட்டு, க்ஷத்ரிய வீரனைப்போலல்லாமல் அவமானத்துடன் மடிவதா?

ர. அப்படியல்ல, ராணாஜி, அவரை எப்படியாவது இன்றிரவே நான் தப்ப வைக்கிறேன்—அது என் பாரம்.

வி. அப்பா, ரணவீர், காயப்பட்டு அலுத்திருக்கும் உன்னால் என்ன முடியும்?—வேண்டாம், நான் சொல்வதைக் கேள்.

ர. அது என் கடன்! தாங்கள் கொடுத்த வரத்தை இல்லையென்று சொல்லக்கூடாது, நான் கையிரந்து வேண்டுகிறேன். ராணாஜி, எப்படியாவது தாங்கள் கொஞ்சம் தயவு செய்யவேண்டும்.

வி. அந்த தசரதன் முதல் என் தந்தை வரையில், கொடுத்ததை இல்லை என்ற ரஜபுத்ரன் சூர்ய வம்சத்தி லுதித்ததில்லை. நானோ அந்தப் பிரதிஷ்டையைக் கெடுத்துக் கொள்ளப் போகிறேன்?—செய் அப்படியே. அவனை உன்னிடம் ஒப்புவிக்கிறேன்—ஆனால் ஒரு யோசனை—அஜீத், நீபோய் உடைசிங்கை எடுத்து வா.

[அஜீத்சிங் போகிறான்.]

ரணவீர்! நமது வம்சம் அற்றுப் போகாதபடி இவன் எப்படியும் தப்பிப் பிழைப்பான் என்று எனக்குத் தோன்றுகிறது; பவானி மாதாவும் நேற்றிரவு கனவில் அப்படியே கூறி யிருக்கிறார்கள்—ஆயினும், அதற்காக நீ உன் உயிரை இழக்கவேண்டி வரும் என்றும் தோன்றுகிறது.

ர. அவ்வளவுதானே! ராணாஜி, எனக்கு இருக்கும் வருத்தமெல்லாம் எனது ராணாவின் பொருட்டு இழப்பதற்கு எனக்கு ஒரே உயிர்தானே இருக்கிற தென்பதேயாம். எனக்கு ஆயிரம் உயிரிருக்கு மாயின் அந்த ஆயிரத்தையும் அணுவளவும் வருத்தமில்லாமல் சந்தோஷமாய் இழக்கத் துணிவேன் அதன்பொருட்டு! ரஜபுத்ர சுத்த வீரனுக்குத் தன் மானத்தின் பொருட்டு உயிரை விடுவதே மேலான சந்தோஷம்! அதைப் பார்க்கிலும் மஹத்தான சந்தோஷம் உலகில் ஒன்றுதா னிருக்கிறது—அது, அவ் வுயிரை தன் ராணாவின் பொருட்டுக் கொடுப்பதேயாம்! ஏகலிங்கன் கருணையினால் அது எனக்குக் கிடைத்ததே!

அஜீத்சிங் உடைசிங்கை தூக்கிக்கொண்டு

வருகிறான்.

உ. நாநாஜி, நமஸ்கார்.—ரணவீர், நீ நன்றாக சண்டை போட்டதாக தேவி சொன்னார்கள்—உன் கையில் பெரிய காயம் பட்டதாமே?

ர. [குழந்தையைத் தழுவிக்கொண்டு] உடை சிங்ஜி! உமது பொருட்டு, இனி நான் சண்டை போடுவதற் கில்லையே என்றே வருத்தப்படுகிறேன்.

வி. காலதாமதமாகிறது—ரஜபுத்ர வீரர்களே! நமது தீர் மானப் பிரகாரம் நாளைத்தினம் நாம் பெரும் பிரயாணம் போகவேண்டி யிருக்கிறபடியால் இந்த உடைசிங்குக்கு ராணா பட்டம் இதோ கட்டுகிறேன், உங்கள் அனுமதி யின்மீது!

[தன் தலைகுட்டையை அவனுக் குப் போட்டு, தன் வாளை அவ னிடுப்பில் கட்டுகிறான்.]

டீகாவுக்கு குங்கும மில்லையே? இல்லாவிட்டாலும் பெரி தல்ல. இந்த சமயம் இதையெல்லாம் பார்த்து முடி யாது.

ர. அன்று அன்று—இதோ!

[ரணவீர்சிங் தன் கை காயக்கட் டை அவிழ்த்து, அதில் நின்றும் சொரியும் ரக்தத்தினால் பொட் டு இடுகிறான்.]

வி. ரணவீர்! மெச்சினேன்! மெச்சினேன்! நானும் அதைக் கொஞ்சம் இட்டுக் கொள்ளுகிறேன். ஏக லிங்கன் பாதத்திற்கு இதனுடன் நாளை நெடும் பிரயாணம் போ கிறேன்.

மற்றவர். நாங்களும் அப்படியே செய்கிறோம்!

[ஒவ்வொரு தளகர்த்தனும், அந்த ரக்தத்தைத் தொட்டு, முகத்தில் திலகமிட்டுக் கொள்ளுகிறான்.]

வி. தளகர்த்தர்களே! உங்கள் புதிய ராணுவைப் பணியுங்கள்.

[ஒவ்வொரு தளகர்த்தனுக வந்து முழந்தாளிட்டு, உடைசிங்கைப் பணிந்து கையை முத்தமிட்டு ஒதுங்கி நிற்கிறான்.]

பட்டாபிஷேகம் ஆச்சுது—இனி போவோம் ஏகலிங்கன் கோயிலுக்கு. நகாரா பஜாவ்!

[பேரிகை முழங்குகிறது.]

எல்லோரும். உடைசிங் ராணுகிஜெய்! உடைசிங் ராணுகிஜெய்!

[ரணவீர் உடைசிங்கை இடது கையால் தூக்கிக்கொள்ள, மற்றவர்கள் ஜெய கோஷத்துடன் போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி.

இடம்—ரணவீர்சிங் வீட்டில் ஓர் அறை.

காலம்—இரவு.

ஒருபுறமாக ஜ்வாலாபாய் சயனித்துக்கொண்
டிருக்கிருள்.

மற்ருெருபுறமாக சந்திராபாய் ஓர் விளக்கை வைத்து
தேவதாராதனம் செய்துகொண்
டிருக்கிருள்.

ச. [ஸ்தோத்திரம் செய்கிருள்.]

ராகம்—கல்யாணி. தாளம்—ஆதி.

பல்லவி.

நீயே மனமகிழ்வோடு கருணை செய்வாயே
மாயே என் தாயே (நீ)

அனுபல்லவி.

நாயேன் தனக்கொரு கதிவேறில்லை
நாரணி தாரணி பூரணி ஆரணி (நீ)

சரணங்கள்.

வாணி கமலாசனி ரதியிந்திராணி மகிழ்ந்திடும்
வரதா பயபாணி அளிகுலமலரணி கனவேணி
ருத்ராணி ஸர்வாணி கல்யாணி! (நீ)

தனியே நினைபவர் மனமானஸதனியே
மஹிஷாசுரசம் மர்த்தனியே நிஷ்களங்க சந்த்ரவதனியே
தர்மசம்வர்த்தனியே சஞ்தனியே! (நீ)

பிணியே அணுகாதருள் சித்ரூபிணியே
பேரன்பர்க்கருள் முக்கனியே

மணிகணுபரண பூஷணியே
மதுர பாஷிணியே என் கண்மணியே ! (நீ)

தேவி ! நீயே துணே ! என் பிராணநாதன் ஜெயத்துடனு வது திரும்பி வரவேண்டும், அல்லது சுத்தவீரனய் சுவர்க்கம் புகவேண்டும்.

ஜ். பாலா ? பாலா ?—பாலா வந்தானு சந்திரா ?

ச. பிரதாப் ! பிரதாப் !—இன்னும் வரவில்லே மாதாதேவி. அவன் ஒருவரிடமும் சொல்லாதபடி யுத்தம் நடப்பதைத் தான் பார்க்கப் போயிருக்கிருன் என்று எண்ணுகிறேன். அந்தத்துடுக்கு யுத்தத்திற்கே போயிருந்தாலுமிருக்கும். காலேயில் மாமாஜியினுடைய வாளே யெடுத்துக் கூர் பார்த்துக்கொண் டிருந்தான். நான் அதட்டி வாங்கிவைத்தேன்.

ஜ். சந்திரா, அவனேத் தடுக்க உன்னுலுமாகாது ! என்னுலுமாகாது !—சிம்ஹத்தின் வயிற்றில் சிம்ஹம் தானே பிறக்கும் !—உன் பிராணநாதனேப்பற்றி ஏதாவது சமாசாரம் வந்ததா ?

ச. ஒன்றும் வரவில்லே மாதாஜி.

ஜ். சற்று முன்பாக என்னவோ கூச்சல் கேட்டதே ?

ச. நானும் கேட்டேன்—ஆயினும் நான் என்ன செய்வது ? எப்படிப் போய் வெளியில் கேட்பது ? கேட்கத்தான் யாரிருக்கிருர்கள் ? மடிந்தவர்கள் போக மற்றவர்களெல்லாம் யுத்தத்திற்குப் போயிருக்கிருர்களே !

பிரதாப் ஓடி வருகிருன்.

பி. அம்மாஜி ! அம்மாஜி ! அண்ணு ஜெயித்துவிட்டார் ! ஜெயித்துவிட்டார் !

ஜ். தேவி ! தேவி !

[கைக்கூப்பி வணங்குகிருள்.]

பி. தன் சபதத்தையும் நிறைவேற்றிவிட்டார்; அந்த கரீம் தலையை வாழைமரத்தை வெட்டுவதுபோல் வெட்டி விட்டார் !

ச. தேவி ! எல்லாம் உமது கருணை !

[விளக்கருகில் சென்று நமஸ்கரிக் கிருள்.]

ஜ். பாலா ! இப்படி வாடா என் கண்ணே ! இந்தா உனக்கு இந்த சமாசாரம் கொண்டு வந்ததற்காக ஒரு முத்தம் !

[முத்தம் கொடுக்கிருள்.]

பி. அம்மாஜி, நீங்கள் எனக் கொரு முத்தம் கொடுக்க மாட் டீர்கள் ?

ச. கொடுக்கிறேன், அதற்கப்புறம் நீ என் உத்தரவில்லாமல் வீட்டை விட்டுப் போனதற்காக பிரம்படி கொடுக்கப் போகிறேன்—என்ன சொல்லுகிருய் ?

பி. ஆம் அம்மாஜி, அது நியாயம்தான் சொல்லாமற் போனது தவறுதான். அதற்கு அடிபட வேண்டியது தான்—ஆயினும் என்னுலானமட்டும் என் கால்களைப் போகவேண்டாமென்று தடுத்துப் பார்த்தேன்.—அவை கள் கேளாமல் என்னை தூக்கிக்கொண்டு ஓடிப்போய்விட் டன ! நான் என்ன செய்வது ? ஆனலும் தப்பு தப்பு தான்.—ஆனல் அம்மாஜி, முன்பு அடி கொடுத்து விடுங் கள்—பிறகு முத்தம் கொடுங்கள் !

ச. கண்ணே ! கண்ணே ! உன்னை யடிக்க என்கை எப்படி யடா எழும் ! ஆயினும் உன்னை அடிக்கவேண்டும் ; சொல் மாறலாகாது.

[ஒரு பிரம்பை எடுத்து கையில் மெதுவாய் ஒரு அடி அடிக் கிருள்.]

இனி போவதாயின் என்னைக் கேட்டுக்கொண்டு போ. பிறகு, இந்தா முத்தம் [முத்தமிட்டு]
நீயும் உன் அண்ணாவைப்போல் சுத்த வீரனாகவேண்டும்! இப்பொழுது சொல், அண்ணா எப்படி சண்டைபோட்டு வெற்றி கொண்டார் என்பதை.

ஜ. சந்திரா, நானும் கேட்கட்டும்.

ச. இதோ மாதாஜி.

[பிரதாபை அவளருகில் அழைத்துக்கொண்டு போகிறாள்.]

பிரதாப், ஆரம்பி.

பி. அண்ணாவைப் பார்த்தவுடனே, சிங்கத்தை பார்த்தவுடனே யானைகளெல்லாம் ஓடுமே, அந்த மாதிரி, நபாப் சைனியங்களெல்லாம் ஓடின. அண்ணா கத்தியை ஓங்கிக்கொண்டு அப்துல் கரீம் இருக்கிற இடத்திற்கு வேகமாய் துரத்தினார் குதிரையை—அதைக்கண்டு இருபது இருபத்தைஞ்சு மஹம்மதிய வீரர்கள் அண்ணாவை சுற்றிக் கொண்டார்கள்!—அண்ணா அவர்களை யெல்லாம் எப்படி கொன்றாரோ எனக்குத் தெரியாது, அவர்கள் தலைகள் பனங்காய்கள் பனமரத்திலிருந்து வீழ்வது போல் வீழ்ந்ததுதான் தெரியு மெனக்கு! இதைப் பார்த்தவுடனே அப்துல்கரீமுக்கு அடங்காத கோபமுண்டாகி, அண்ணாவை எதிர்த்தான். அவர்கள் இரண்டு பெயரும் போட்ட சண்டையுண்டே, அதை என்னால் சொல்ல முடியா தம்மா! மற்றவர்களெல்லாம் தாங்கள் போடும் சண்டையை மறந்து இதையே கண்கொட்டாது பார்த்துக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது ஒரு குண்டூசி விழுந்தால் சப்தம் கேட்டிருக்கும். அப்பொழுது என்ன செய்தான், அந்த கழுதை புட்டு—அவனை ரஜபுத்ரவீரனென்று எண்ணிக்கொண் டிருந்தோமே—அவன் வாஸ்தவத்தில் துலுக்கனாம்!—அண்

ணு பின்னால் வந்து குத்தினன்.—உடனே அண்ணு, எதிரிக்கு ! முதுகைக் காட்டாமலே, பின்னால் பாய்ந்து அவனை வெட்டினர்—அவன் அப்படியே செத்தவன் போல் விழுந்து விட்டான். பிறகு அண்ணு மறுபடியும் அப்துல்கரீமைத் துரத்தினர், அந்த சமயம், ஏதோ கல் தடுக்கி அண்ணு கீழே விழுந்தார்—இதைப் பார்த்து கரீம் அண்ணுமீது பாய, உடனே க்ஷணத்தில் எழுந் திருந்து அவனை ஒரே வெட்டாய் வெட்டி விட்டார். இந்த சமயம் பார்த்து புட்டு மெல்ல எழுந்து ஓடிப் போய்விட்டான். என் கையிலே மாத்திரம் ஒரு வாள் இருந்தால் அந்தப் பாதகன் புட்டுவை அப்படியே தாடி யைப் பிடித்து வெட்டிவிட் டிருப்பேன் !

ச. கண்ணே ! கண்ணே !

ஜ். பாலா, அப்புறம்—என்ன செய்தான் ரணவீர் ?

பி. அப்புறம் அப்துல்கரீம் தலையை வெட்டி எடுத்துக் கொண்டு ராணுஜியிடம் போனர். அம்மா கோபித்துக் கொள்ளப் போகிருர்களென்று நான் நேராக வீட்டிற்கு ஓரே ஓட்டமாய் ஓடிவந்துவிட்டேன் !

ச. ஐயோ பாவம் !

[வெளியில் பேரிகை முழங்கு கிறது.]

என்ன அது ? ராணுஜியின் பேரிகையைப்போல் இருக் கிறது ! பிரதாப், அது என்ன பேரிகை முழக்கம் என்று விசாரித்து வா.

பி. இதோ வருகிறேன்.

[வெளியில் ஓடுகிருன்.]

ஜ். ராணுஜியின் பேரிகையா யிருக்கிறது !

ச. ராணுஜி, இப்பொழுது இங்கு வருவானேன் ?

ஜ். சந்திரா, ரணவீர் வீட்டிற்கு வந்ததும் ஆலம் சுற்றி யழை—எத்தனை பெயர் கண்கள் பட்டிருக்குமோ?

ச. அப்படியே மாதாஜி.

[ஆலம் சித்தம் செய்கிறுள்.]

பிரதாப் மறுபடியும் ஓடி வருகிறுன்.

பி. அம்மாஜி! அம்மாஜி! அண்ணு வருகிறுர் சின்ன ராணு வை தூக்கிக்கொண்டு நம்முடைய வீட்டிற்கு! நம் முடைய வீட்டிற்கு!

ச. என்ன விசேஷமோ?

பரிவாரங்கள்சூழ ரணவீர் உடைசிங்கை தூக்கிக்கொண்டு வருகிறுன்.

ர. [பரிவாரங்களுக்கு] நீங்க ளனைவரும் சந்தடி செய்யாது அவரவர்கள் வீடுபோய்ச் சேருங்கள்.

[பரிவாரங்கள் விடை பெற்றுப் போகின்றனர்.]

ஜ். சந்திரா, அவர்க ளிருவருக்கும் ஆலம் சுற்றி யழை.

ர. சந்திராபாய், இதோ நம்முடைய புதிய ராணுஜியை யழைத்து வந்திருக்கிறேன். விக்கிரமஜித்ராணுஜி உடை சிங்குக்கு இப்பொழுதுதான் பட்டம் சூட்டினுர். மாதா ஜிக்குச் சொல். நீங்க ளெல்லோரும் இவருக்குத் தக்க படி மரியாதை செய்யுங்கள்.

[சந்திராபாய் ஜ்வாலாபாய் பிர தாப் மூவரும் உடைசிங்கை வணங்குகிறுர்கள்.]

ராணுஜி! இப்படி உட்காரும்.

[ஒருபுறம் உட்காரவைக்கிறுன்.]

பி. அண்ணாஜி, நமஸ்கார்.

[ரணவீர்சிங் பிரதாபின் உச்சி முகர்கிறான். பிறகு பிரதாப் அவன் கேடயத்தை வாங்கிக் கொண்டுபோய் மூலையில்வைக் கிறான்.]

ச. பிராணநாத், நமஸ்கார்.

[ரணவீர் முத்தமிடுகிறான், சந் திரா அவன் கத்தியைக் கழற் றுகிறாள். கழற்றும்பொழுது அவன் கையில் பட்டிருக்கும் காயத்தைப் பார்த்து]

ஆ! நாதா!

[ரணவீர் கூச்சலிட வேண்டா மென்று அவளுக்கு சைகை செய்கிறான்.]

ஜ். சந்திரா! என்ன சமாசாரம்? ரணவீருக்கு ஏதாவது காயம்பட் டிருக்கிறதா என்ன?

ர இல்லை, மாதாஜி, கொஞ்சம் காயம்பட்டது.—அதைக் கண்டு பயந்தாள் சந்திரா

ஜ். ரணவீர், வா இப்படி.

ர. இதோ வந்துவிட்டேன் மாதாஜி.

[போய் பாதத்தில் வீழ்ந்து நமஸ் கரிக்கிறான்.]

ஜ். ரணவீர்! எங்கே காயம்? முதுகி லில்லையே?

[அவன் முதுகில் தடவிப் பார்க் கிறாள்.]

ர. மாதாஜி! பிரதாப்சிங்கின் குமாரனாய், உம்முடைய வயிற் றிலுதித்தவன், முதுகில் காயத்துடன் திரும்பி வீட்

டிற்கு வருவானே உயிருடன்!—இதோ, வலது கையில் பட்டிருக்கிறது.

ஜ். ரணவீர்! இன்று உன்னை மறுபடியும் பெற்றெடுத்தேன். உன்னைப் பெற்றதற்காக நீ எனக்கு செலுத்தவேண்டிய கடனை இன்று தீர்த்துவிட்டாய்! இனி நான் சுகமாய் இறப்பேன்.

ப. ஆ! அந்த திருடன் புட்டு குத்தினது!

ர. பிரதாப், உனக்கெண்ணமாகத் தெரியும்?

பி. நான் வந்து பார்த்தேன் அண்ணா! அப்பொழுது மாத்திரம் என் கையில் கத்தி யிருந்தால் அவனை ஒரே வெட்டாய் வெட்டிவிட் டிருப்பேன்!

ர. கெட்டிக்காரன்தான்! அதிருக்கட்டும் உனக்கு யார் உத்தரவு கொடுத்தது வீட்டைவிட்டு வர?

பி. அது தப்புதான் அண்ணா, அதற்காக அம்மாஜி அடித்துவிட்டார்கள் என்னை—நீங்கள் ஜெயித்த சமாசாரம் எல்லாம் சொன்னதற்காக ஒரு முத்தம்கூட கொடுத்தார்கள்.

ர. சந்தோஷம்—ஆனால் நீபோய் ராணுஜியோடு விளையாடிக் கொண் டிரு

[பிரதாப் அப்படியே செய்கிறான்.]

சந்திரா, இப்படி அருகில் வா, மாதாஜி, உங்களோடு ஒரு முக்கியமான சமாசாரம் பேசவேண்டும்.

ஜ். என்ன அது?

ர. சண்டையின் சமாசாரம் எல்லாம்தான் பிரதாப் சொல்லி யிருப்பான் என்று நினைக்கிறேன்.

ஜ். ஆம்.

ர. பிறகு, நான் அந்த அப்துல்கரீம் தலையை சபதம் செய்த படி வெட்டிக் கொண்டுபோய் விக்ரமஜித்ராணுஜி பாதத்தில் சமர்ப்பித்தேன்; அவர் அதற்காக நான் வேண்டும் வரத்தைக் கொடுப்பதாகக் கூறிவிட்டு, மிகுந்திருந்த தளகர்த்தர்களை யெல்லாம் சபை கூட்டி ஆலோசித்து, நாளைத்தினம் காலையில்—ஜோஹர் முடிந்து—மஞ்சள் ஆடையை உடுக்கவேண்டும் ரஜபுத்திரர்களெல்லாம், என்று தீர்மானித்தார்.

ஜ். மிகவும் சந்தோஷம்! நீ என்னமோ சொல்லப் போகிறு யென் றல்லவோ பார்த்தேன்! இதற் கென்ன யோசனை? சந்திரா, நீ ஏதாவது யோசிக்கிறுயா என்ன?

ச. மாதாஜி! என்ன வார்த்தை சொன்னீர்கள்? அக்னி குலத்தினி லுதித்த ரஹ்தோர் ஜாதிப்பெண் நான், என் பதை மறந்தீர்களோ? என்னுடைய தாயார் யுத்தத்தில் கவசம் பூண்டு ,வாளைக் கையி லேந்தி மடிந்ததேவி என் பது ஞாபக மில்லையோ? அப்படிப்பட்டவர்கள் வயிற்றி லுதித்து, அக்னிப் பிரவேசமாக நான் அஞ்சுவேன் என்று எண்ணுகிறீர்களா?

ஜ். சந்திரா! இப்படி வா எனக்கொரு முத்தம் கொடு—உன்னைப்பற்றி நான் சந்தேகப்பட்டுக் கூறினவள் அன்று—நமது மனத்தை ரணவீர் நன்கு யறியட்டும் என்றே இக் கேள்வி கேட்டேன், கோபியாதே.

ர. மாதாஜி, இதைப்பற்றி எனக்கு கனவிலும் சந்தேக மில்லை. நான சொல்லவந்த விஷயம் என்னவெனில், ராணுஜி இவ்வாறு தீர்மானிததபோது, மேவார் வம்சம் அற்றுப்போகா திருக்கவேண்டுமென்று கோரினவனுய், குழந்தையாகிய உடைசிங்கை மாத்திரம் அக்னிப் பிர வேசமாக விடக்கூடாது, அவரை எப்படியாவது காப் பாற்றவேண்டுமென்று வேண்டினேன். கொடுத்த வரத் தை மறுக்க லாகாதென்று, அதற்கவர் இசைந்து, உடை

சிங்கை வரவழைத்து ராணு பட்டத்தைக் கட்டி என் கையில் ஒப்புவித்திருக்கிறுர். அதன்மேல் உடைசிங்கை எப்படியாவது காப்பதன் பொருட்டு, நம்முடைய வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறேன். இந்த உடைசிங் தப்பிப் பிழைக்கும் மார்க்கம் நாம் எப்படியாவது தேட வேண்டும். உடைசிங் சிறு பாலன், தனியாகத் தப்பவும் முடியாது, நான் எடுத்துச் சென்ருல் என்னை எல்லோரும் அறிவார்கள்.—இந்த கஷ்டத்திற் கென்ன செய்வது.

ஜ். ஐயோ ! தேவி ! தேவி ! என் கண்கள் சரியா யிருந்திருக்கலாகாதா?

ச. மாதாஜி ! அதற்காகத் துக்கப்பட வேண்டாம் நான் எடுத்துச் செல்கிறேன் கோட்டைக்கு வெளியாக, உடைசிங் ராணுவை ! ஆனால், எனக் கொரு வரம் கொடுப்பதானல் அப்படி செய்கிறேன்.

ர. என்ன அது ?

ச. உடைசிங் ராணுவை கோட்டைக் கப்புறம் எடுத்துக் கொண்டுபோய், க்ஷேமமான இடத்தில் வைத்துவிட்ட பிறகு, எனக்கு அக்னிப் பிரவேசமாக உத்தரவு கொடுக்கவேண்டும்.

ர. சந்திரா ! மெச்சினேன் உன் தைரியத்தை ! ஆயினும் உன்னை துலுக்கர்கள் கண்டு பிடித்துவிட்டால் என்ன செய்வது ?

ச. என் மானத்தையும் என் பெயரையும் காப்பாற்றிக் கொள்ள பவானிதேவி யளித்த ஆயுதம் எப்பொழுதும் என்னிடம் இருக்கிற தென்பதை மறந்தீரோ ?

ர. ஐயோ ! நீ இறப்பாயாயின் உடைசிங் தப்புவ தெப்படி ? உடைசிங்கை எப்படியாவது பிடிக்க வேண்டுமென்று பார்ப்பானே பஹதூர்ஷா !

உ. பிரதாப், என் தலைகுட்டையை நீ போட்டுக்கொள், உனக்கு எப்படி யிருக்கிறது பார்க்கிறேன். நான் உனக்குப் பட்டம் கட்டுகிறேன் !

[தன் தலைகுட்டையை பிரதாபின் தலையில் போடுகிறான்.]

ச. நாதா ! நமது குலதெய்வமே நமக்கு வழி காட்டியது என்று எண்ணவேண்டும்—உமக் கினி கவலை வேண்டாம்.

ர என்ன யோசனை ?

ச. உடைசிங் ராணுஜி ! இப்படி வாரும்—பிரதாப், நீயும் இப்படி வா. ராணுஜி, உங்கள் உடுப்பையும், கத்தியை யுங்கூட பிரதாபுக்கு கொஞ்சம் இரவல் கொடுக்கிறீர்களா ? உங்கள் உடுப்பை அவனுக்குப் போட்டுப் பார்ப்போம்—அவன் உடுப்பை நீங்கள் போட்டுக் கொள்ளுங்கள்.

உ. அப்படியே ! இது மிகவும் பளுவா யிருக்கிறது. என்னால் தூக்க முடியவில்லை. பிரதாபே வைத்திருக்கட்டும் இவைகளை —

[உடையை மாற்றிக் கொள்ளுகிறார்கள்.]

ஜ். சந்திரா ! உன் புத்தியை மெச்சினேன் !

ச. இனி நீங்கள் போய் விளையாடுங்கள்

ர. சந்திரா ! சந்திரா ! ஷாபாஷ் ! அக்னி குலத் துதிக்கும் ஸ்திரீகளெல்லாம் உன்னைப் போன்றவர்களா யிருப்பார்களாக !—இந்த யோசனை எனக்குத் தோன்றாமற் போச்சுதே !

ச. பிராணநாத் ! இனி கால தாமதம் செய்யலாகாது—இப்பொழுது கோட்டைக்கு வெளியிற் செல்வது முடியாது, நாளைத்தினம் நீங்களெல்லாம் கிழக்கு கோபுரவாயில் வழியாகச் சண்டைக்குச் செல்லும்பொழுது, நான் பிர

தாபை ராணு வேஷத்துடன் மேற்குப் புறமாக எடுத்துச் செல்கிறேன். மாதாஜி உடைசிங் ராணுவை எடுத்துக் கொணடு, நம்முடைய வேலையாள் பவானிதாசனுடன் சற்று தூரமாக வரட்டும், எல்லோரும் தப்புவதானுல் தப்புகிறோம்—இல்லாவிடின் எங்களைப் பிடித்துக் கொள் ளட்டும்—அந்த சமயம் பார்த்து மாதாஜி ராணுவுடன் தப்பலாம்.

ர. அதுவே சரியான வழி ! மாதாஜி, உங்களுடைய எண்ண மெப்படியோ ?

ஜ். அப்படியே ஆகட்டும்.—ஆயினும் நாளைத்தினம் நான் உன் பிதாவிடம் போய்ச் சேரப் போகிறேன் என்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது.—ஆயினும் எப்படி யாவது நமது ராணுஜியைக் காப்பாற்றவேண்டியது நம் முடைய கடன். ஆயினும் சத்தியாக மறிப்பதற் கில்லை யே என்பது மாத்திரம் எனக்கு வருத்தமா யிருக்கிறது.

ச. மாதாஜி ! சத்தியாவதைப் பார்க்கிலும், இது அதிக கஷ் டமல்லவா ? அதைவிட இது மேலல்லவா ! நம்முடைய ராணுவிற்காக இதை நாம் துணிவதே, நமக்கு சூர்ய சந்திரர்கள் உள்ளளவும் கியாதியாகும் அல்லவா ?

ஜ். ஆம் சந்திரா, நீ கூறுவ துண்மைதான். அப்படியே செய் வோம்.

ர. சரி ! தீர்மானித்தாயது—கடைசி முறை பவானி தேவி யை பூசிப்போம் இன்றிரவு—வாருங்கள்.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றும் காட்சி.

இடம்—கோட்டையின் கிழக்கு கோபுரவாயில்.

காலம்—அதிகாலை.

**விக்ரமஜித், அஜீத்சிங், பீமசிங், ரணவீர் முதலியோரும்,**

ரஜபுத்ர சைனியங்களும் மஞ்சள் உடையுடன்

நிற்கின்றனர்.

**வி.** வரவேண்டியவர்களெல்லாம் வந்தாயிற்று?

**அ.** எல்லாம் வந்துவிட்டார்கள் ராஜாஜி

**வி.** ரஜபுத்ரவீரர்களே! உங்களைக் கடைசி முறை கேட்கிறேன் இப்பொழுது உங்களுக்கெல்லாம் நாம் எதன் பொருட்டு மஞ்சள் உடையை யணிந்திருக்கிறோம் என்பது தெரியுமல்லவா? உங்களில் எவனுக்காவது இன்னும் உயிர் வாழ வேண்டுமென்று இச்சை யிருக்குமாயின், அவன் சுகமாய்த் திரும்பிப் போகலாம், என்னுடன் வருவதானால்—சுவர்க்கத்திற்கே என்னுடன் ஏகவேண்டும்—உங்களுக்கெல்லாம் இது சம்மதம்தானா?

**எல்லோரும்.** சம்மதம்! சம்மதம்! ராஜாஜி!

**வி.** அஜீத், எல்லோருக்கும பீடாவைக் கொடு.

[அஜீத் எல்லோருக்கும் பீடாவைக் கொடுக்க, எல்லோரும் அதை வாயில் போட்டுக்கொள்ளுகிறார்கள்.]

அங்கே அக்னிப் பிரவேசத்திற்கு எல்லாம் சித்தமாயிருக்கிறதா?

**அ.** எல்லாம் சித்தமா யிருக்கிறது.

வி. ஆனால், சத்தி நகாராவை முழங்கச் சொல்.

[சத்தி நகாரா முழங்குகிறது. ரஜபுத்ர ஸ்திரீகளெல்லாம் மஞ்சள் ஆடையை யணிந்து வருகின்றனர். அவர்களுக்கு முன்பாக ரஜபுத்திரர்கள் புஷ்பங்களைத் தூவுகின்றனர்.].

ர-ஸ். [பாடிக்கொண்டே நடக்கின்றனர்.]

பல்லவி.

ஈஸ்வரி ஜெயதே—ஜெயதேவி ஸ்ரீ அம்பே
வரதே வரதே வரதே (ஈ)

அநுபல்லவி.

புவனசுந்தரி ஜகதம்பே நிகமவிடப மஞ்சரி
ஞானகனி ஜகத்ஜனனி ப்ரணவரூபிணி
புவனசுந்தரி ஜகதம்பே நிகமவிடப மஞ்சரி (ஈ)

சரணம்.

சந்ததமே சந்தசங்க சந்தமணதி பவஸாகர
தவவிமோசனி ஜகதம்பே நிகமவிடம மஞ்சரி (ஈ)

ஏகலிங்க திரிதிவேச தாசநம்ரகரிதஆஸ
டாவதேயி ஹ்ருதய மஞ்சரி
புவனசுந்தரி ஜகதம்பே நிகமவிடப மஞ்சரி (ஈ)

[எல்லோரும் ரங்கத்தைக் கடந்து செல்கின்றனர். ஒவ்வொரு ரஜபுத்ரவீரனும் தனது குடும்பத்தைச சேர்ந்த ஸ்திரீகள் கடந்து செல்லும்பொழுது அவர்களுடைய முன்தானையின் முகனையை முத்தமிட்டு கண்ணில் பொத்திக்கொள்ளுகிறான். எல்லோரும் போனவுடன் உள்ளிருந்து சத்தீ மாதாகி ஜெய்! என்கிற கோஷ்டம் உண்டாகிறது.]

வி. சரி, அவர்கள் வேலை தீர்ந்தது—இனி நம்முடைய வேலை தான் பாக்கி!—நாம் புறப்படுவோம்.

[ஒவ்வொரு ரஜபுத்ரனுக விக்கிரமஜித்தைப் பணிந்து ஒருபுறமாக ஒதுங்கி நிற்கிறுன். கடைசியில் ரணவீர் பணிகிறுன்.]

ரணவீர்! நீ செய்யும் உபகாரத்திற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்! ஆயினும் இதைக் கூறுகிறேன்; இவ்வுலகுள்ளளவும் இனி க்ஷத்ரிய குலத்திலுதிக்கும், உன்னுடைய குமாரன் பெயராகிய பிரதாப் என்னும் பெயரைப் பூண்ட, ஒவ்வொரு ரஜபுத்ரனும், சுத்த வீரனுய், தன் அரசன் பொருட்டு தன் னுயிரைக் கொடுக்கச் சித்தமா யிருக்கும் பிரசித்தியை உடையவனு யிருப்பானுக!

ச. ராணுஜி,—

[காதில் ஏதோ ஓதுகிறுன்.]

வி. சரி! அப்படியே செய்!—கோட்டைக் கதவைத் திறவுங்கள்! ஜெய்! ஏகலிங்கா! ஜெய் பவானிதேவி!

[யுத்தபேரிகை முழங்குகிறது.]

மற்றவர். ஜெய் ஏகலிங்கா! ஜெய் பவானிதேவி!

[வாளை ஓங்கிக்கொண்டு வெளியே விரைகின்றனர்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் காட்சி.

இடம்—சித்தூர்க் கோட்டை கொத்தளம்.

காலம்—பகல்.

பஹதூர்ஷா, தன் சர்தார்கள் பரிவாரங்கள் சூழ வீற்றிருக்கிறான்.

ப. வஹ்வா! லோகம்மே மன்ஷன் ஜெயிச்சா, இந்த மாதிரி சூரம் ஜாதிகி ஜெயிக்கோணும்! க்ஷத்ரி ஆம்பிளேகி சண்டே போட்டது படா இல்லே எம் மனஸ்லே! இந்த க்ஷத்ரி அவ்ரதாம் அங்கார்லே உய்ந்து பூட்டாங்களே, ஓ படேகாம் ஹை! இத்னி படா பட்டன்மே ஓர் க்ஷத்ரி ஆம்பளே ஓர் க்ஷத்ரி பொம்பளே உசுரோட இல்லே!— வஹ்வா! இத்னி பேர் நீங்க படாபடா சிப்பாய்ங்க இர்ந்தும், அந்த சின்ன பையன் ராணு எங்கே போனு? எங்கே ஒளிச்சிருக்கிறுன்? கண்டுபுடிக்க முடியலே!

ஜைனுலாப்தீன் வருகிறுன்.

ஜைனுல்! கண்டு புடிச்சியா சின்ன ராணுவெ?

ஜை. ஷா இன்ஷா! அந்த ரணவீர்தான் அவனை எங்கேயோ ஒளித்து வைத்திருக்கிறுன் என்பதற்குச் சந்தேகமில்லை. நேற்றைத்தினம் எப்படியாவது உடைசிங் ராணுவை பட்டணத்தினின்றும் தப்ப வைப்பதாகப் பிரமாணம் செய்து கொடுத்தானும் விக்ரமஜித் ராணுவுக்கு, நமது ஒற்றர்களால் அதை யறிந்தேன். அந்த ராணுவைத் தப்ப வைப்பதற்கே, ரணவீர் மற்றவர்களைப்போல் கோட்டையை விட்டு வெளியில் யுத்தத்திற்கு வரவில்லை. காலம போக்கவே, கோட்டை வாசலில் நின்று அத்தனை நேரம் சண்டை செய்தான் நாம் பிடித்துக்கொள்ளும் வரையில்

ப. அவன்கி நண்ணு ஒதைச்சி கேட்டியா?

ஜை. ஷா இன்ஷா! ஒதை எங்கே! எங்களா லானமட்டும் சித்ரவதை செய்து பார்த்தோம்! வாயைத் திறக்கமாட்டேன் என்கிருன்—எவ்வளவோ பயப்படுத்திேனும்—வலக்கையை அப்படியே வெட்டிேனும்! அப்பொழுதும் வாயைத் திறக்கவில்லை அவன்.

ப. அவனெ என்கு சாம்நே புடிச்சிகினு வா?

ஜை ஜோ ஹுகும்!

[ஜைனுல் போகிருன்.]

ப. இந்த ராணு சின்ன பையன்! தாணு போயிருக்க மாட்டா. வேறே யாராவது தூக்கிகுனு போயிருக்கணும். எங்கேயோ ஒளிச்சிவைச்சிருக்கணும் இந்த ரணவீர்கி எப்படியும் தெர்யும் நெனைக்கிறேன்.

மற்றவர். ஆமாம், ஷா இன்ஷா!

ஜைனுல் ரணவீரை இரும்பு சங்கிலிகளால் கட்டி
நான்கு சேவகர்கள் காவலுடன்
கொண்டு வருகிருன்.

ஜை. ஷா இன்ஷா, இதோ கொண்டுவந்திருக்கிறேன்.

ப. ரணவீர்! சோடா ராணுகி நீ எங்கேயோ ஒளிச்சி வைச்சிருக்கிருன், நம்பள்கி தெரிஞ்சி பூட்டான்—இப்போ நீ சொல்ரா இல்லே உன்கா தலே வட்டிபூடரான்? கியா, சொல்ரா இல்லே?—

[கத்தியை உருவி வெட்டப்போகிருன், ரணவீர் கொஞ்சமும் பயப்படாது நகைக்கிருன்.]

அரே ! ஷிரிக்கரா !—ரணவீர் ! நீ நிஜம்கி ஷூரன் இருக்ரா ! வஹ்வா ! ரண்வீர், உன்கி தலே வெட்ட நம்பள்கி மனஸ் இருக்கரா இல்லெ !— ரணவீர், தூஸ்ராபாத் சொல்ரே கேள்—உன்கி ராணு பட்டம் நம்பள் கட்ரான், மேரிபாத் தேகோ ! நீ மாத்ரம் சோடா ராணு எங்கே இருக்கரா சொல்ரா, அவனே தள்ளி போட்டு உன்கி அந்தச்சணம் ராணு பட்டம் நம்போ—ஷா இன்ஷா !—பஹதூர்ஷா கட்ரா ! கியா சொல்ரா ?

ஜை. ஐயோ ! அப்டி செய்யக்கூடாது ஷாஇன்ஷா !

ப. சப்ரஹோ !—ரணவீர், என்று சொல்ரா நீ ?

ஜை. ஹுஜூர், வாயைத் திறக்கவே மாட்டேன் என்கிறான் என்ன கேட்டாலும் ! எவ்வளவோ அடித்தும் பார்த்தோர், உதைத்தும் பார்த்தோர், சித்திரவதை செய்தும் பார்த்தோம், ஒன்றும் பிரயோஜனப்படவில்லே யென்று முன்னமே தெரிவித்தேனே ! நாக்கைப வெட்டின போதும் வாயைத் திறக்காதவன் இதற்கெல்லாம் வாயைத் திறக்கப் போகிறனு ?

[உள்ளே "ராணு பக்ளே ! ராணு பக்ளே !" என்கிற ஆரவாரம் கேட்கிறது.]

ப. ஆ ! ரண்வீர், நம்போபாத் கேக்கமாட்டே இண்ணியே, இப்போ என்று சொல்ரா நீ ? உன் ஒத்தாசெ இல்லாதெ சோடாராணு நம்ப புடிச்சிகினு ! ர்தார், லே ஆவ் இதர்.

ஜை. இப்பொழுதென்ன சொல்கிருய் ரணவீரா ?

இரண்டு சேவகர்கள் ராணு வேஷம்பூண்ட
பிரதாபைக் கட்டிக்கொண்டு
வருகிறார்கள்.

ப. உடைசிங் ராணு! நம்பள்கி, பஹாதூர்ஷாகி, சலாம் கரோ பைலெ.

பி. நீயா பஹதூர்ஷா? நீ எனக்கு சலாம் பண்ணு முன்னே!

ஜை. அடே! ஷாஇன்ஷாவைத் திட்டுகிறாயா! மாரோ!

[அடிக்கப் போகிறான்.]

அடடாடா! ஷாஇன்ஷா, இந்த பையன் ராணு அல்ல! ராணுஜி அல்ல, ராணு வேஷம் போட்டவன்! ராணுவின் முடி உடை கத்தி எல்லா மிருக்கிறது அவ்வளவே! டீக்கா இல்லே முகத்தில் பாருங்கள்.

பி. தூத்தெரி! புட்டு!—

[அவன் முகத்தில் காரி துப்பு கிறான்.]

ஜை. ஆ ஆ! நான் கண்டுபிடித்துவிட்டேன்! இந்தப் பையன், பிரதாப், ரணவீர்சிங்கின் மகன்!

ப. ஆ ஆ! அப்டி இருக்கிறான்?

ஜை. ஆம், ஷா இன்ஷா, சந்தேக மில்லே. எனக்கு நன்றாய்த் தெரியும். இவன் குரல் எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது.

பி ஆம், நான் பிரதாப்சிங்தான்—ரணவீர்சிங்கின் மகன் தான்! என்னைக் கொல்வதானல் கொல்லுங்கள்.

ம. இன்கா நாம் கியா ?—பொரதாப் !—நீ நல்ல பையன் இருக்கிருன், ராணு உடைசிங் எங்கே ஒளிச்சி இருக்கரா சொல்ரா, உன்னே உட்டேரான்.

பி. அண்ணு ! ஒன்றும் பயப்படாதீர் ! நாணு சொல்வேன் ? பஹதூர்ஷா ! என்னையும் இந்த இழிகுலத்திற் பிறந்த புட்டுவைப்போல் எண்ணினீரோ ? எங்கள் ராணுவின் உணவைப் புசித்துவிட்டு அவருக்கா துரோகம் செய்வேன் ? நாங்க ளிட்ட உணவைப் புசித்துவிட்டு இத்தனை வருஷமாக, எங்களுக்கே துரோகம் செய்தானே இந்த பாதகன் புட்டு, இவனைப்போல் நான் ஒருகாலும் செய்யமாட்டேன் ! எங்கள் ராணு விருக்குமிடத்தை என் வாயால் கூறமாட்டேன். எனக்கு சுவாமி நாக்கை கொடுத்தது எங்கள் ராணுவைப் புகழ்வதற்கே யல்லாமல், அவருக்கு துரோகம் செய்யவல்ல !—

ப. அரே ! இவன் ரொம்ப பேசரான், ஜைனுல் ! இவன்கி இஸ்துக்கினுபோய் நண்ணு அடிக்கரா. அப்போ சரீகி வர்வான்.

ஜை. ஜோஹுகும் :—இவன் என்னை வைததற்காக, அதோ இருக்கும் நெருப்பில் காய்ச்சிய இரும்புகளால் வாயில் சூடு போடுகிறேன்.

பி. எதோ நெருப்பு, பார்க்கலாம் ?

ஜை. வா இப்படி காட்டுகிறேன்.

[ஒருபுறமாய் வளர்த்தியிருக்கும் நெருப்பி னருகில் இழுத்துக் கொண்டு போகிருன்.]

பி. இவ்வளவுதானு நெருப்பு!— பஹதூர்ஷா! எங்கள் ராணு இருக்குமிடம் சொல்கிறேன் கொஞ்சம் கேட்க வேணும்.

ப. ஆ! வழிகி வந்தான்—சொல்—இப்போ சொல், ராணு எங்கே இருக்கிருன்?

பி. ஷா இன்ஷா! எங்கள் ராணு என்னைப் போன்ற க்ஷத்திரியர்கள் மனசென்னும் சிம்ஹாசனத்தி லிருக்கிருர்!— ஆகவே எங்களை யெல்லாம் கொன்று பிறகு அவரைப் பிடித்துக் கொள்ளும்.—அண்ணு அஞ்சாதீர்!— ஜெய் ஏகலிங்கா!

[தீயில் வீழ்ந்து மரிக்கிருன்.]

மற்றவர். ஆ! ஆ!

ப. வஹ்வா! ஷாபாஷ்! ஷிங்கம் வவுத்லே ஷிங்கம் குட்டி பொறந்தா!

[ஒரு சேவகன் வந்து பஹதூர் ஷாவின் காதில் ஏதோ சொல்கிருன்.]

வைசாஹை? பொஹத் அச்சா!—ஓ புட்டி அவ்ரத்கி புலாகர் ஆவ் ஜல்தி!

[சேவகன் விரைந்து போகிருன்.]

அரே! ரணவீர்! இப்போ உன்கி தைர்யம் நம்போ பாக்கருன்!

சேவகன் ஜவாலாபாயை அழைத்துக்கொண்டு
வருகிருன்.

ரணவீர்! இப்போ என்ன சொல்ரா நீ?—தேகோ! பார் இங்கே!—அரே! எங்கே பாக்ரே பீபி?

ஜை. ஷா இன்ஷா, இந்த அம்மாளுக்குக் கண் தெரியாது.

ப. அரே ! அந்தே ! ரொம்போ பாவம்கி இருக்கரா ! ரண வீர், இதர் தேகோ, உன்கி மா ! உன்கி வவுத்லே பெத்த மாபீபி ! உன்கி சாம்நே உன்கிமா தலெ வெட்டிபூடரே, நீ ராணு எங்கே ஒளிச்சிவைச்சிருக்கிறே சொல்லாபூட் டா,—இன்னும் பேசாதே இருக்கரா ?— வெட்டட் டுமா ?

ஜ். ரணவீர் !—

ப. ஆ ! அம்மாஜி ! உன்கா பேடாகு புத்தி சொல் ! சும்மா என்னுத்கு செத்துபூடரே; ராணு எங்கே ஒளிச்சி இருக் கரா சொல்ரா நம்பள்கி, நம்போ உங்கோ ரெண்டு பேர்கி வுட்டுபூடரான் !—ராணு பட்டம் உன்கி புள்ளேகி, ரண் வீர்கு, கட்ரான் நம்போ !

ஜ். ஷாஜீ, ரணவீரிடம் ஒரு வார்த்தை பேசவேண்டும் நான்.

ப. அச்சா ! அப்டி. செய் ! ஹுகும் கொடுக்கரா நம்பள் ! உன்கி புள்ளேகி புத்தி சொல்.

ஜ். ரணவீர் !

[தள்ளாடிக்கொண்டு ரணவீரிடம் போய், அவன் காதில் ஏதோ ஓதுகிருள். ரணவீர் பணிந்து இடது கையால் அவள் பாதத் தைத் தொட்டு சிரசில் வைத் துக் கொள்ளுகிருன்.]

ரணவீர் ! என்னைக் குறித்து நீ பயப்படவேண்டாம் !— ஜெய் ! பவானி தேவி !

[தன் ஆடையில் ஒளித்து வைத் திருந்த கட்டாரியை விரைவில் எடுத்து தன் ஹிருதயத்திற் குத்திக்கொண்டு மரிக்கிருள்.]

மற்றவர். அரே! ரே ரே!

ப. அரே ரே ரே! க்ஷத்ரி ஆம்பிளேகி தைரியம் இருக்கரா இண்ணு பாத்தா! இந்த க்ஷத்ரி பொம்பளேகி எத்னி தைரியம் இருந்தா!—ரணவீர்! உன்னே இன்னும் உட்ரா இல்லே நம்பள்—சவார்! புலாகர் ஆவ் ஜல்தி இன்கா அவ்ரத்!—

[ஒரு சேவகன் போகிறான்.]

இப்போ நீ வாய் மூடி இருக்கரதே பாக்கரா நம்பள்!

சேவகன் சந்திராபாயை அழைத்துக்கொண்டு வருகிறான்.

ரணவீர்! இந்த அவ்ரத்யார் தெரியும்? அரே, இவ யாவஷ் முக் எடுத்தூடரான்!

[சந்திராபாய் தன் முக்காட்டைத் தானே எடுத்து விடுகிறாள்.]

அச்சா! இப்போ தெரியரா உன்காபீபி?— இப்போ என்ன சொல்ரா?—அரேரேரே! முன்னே இவகிட்ட பிச்வா எடுத்தூடரான்!

ஜை. இதோ, ஷா இன்ஷா!

[சந்திராபாய் அருகில்போகிறாள். சந்திராபாய், தன் பிச்வாவைத் தானாக எடுத்து, புட்டுவின் முகத்தில் எறிகிறாள்.]

ப. பஹூத் அச்சா! இனிமே பயம் நஹி!—இந்த க்ஷத்ரி ஜாதிகி உயிர்கி பயம் இருக்கரா இல்லே!—தூஸ்ரா ரஸ்

தா தேக்ஞ—அரே ! ரண்வீர் இப்போ ஆகீர்பாத் சொல்ரா ! இப்போ நீ ராணு ஒளிச்சிவைச்சி இருக்கிற எடம் சொல்லாப்போனு, உன்கி பீபி சாம்னே உன்கி வெட்டி போட்டு, உன்கி பீபி, மோராஜெனுகி கொண்டு பூடரான் !— கியாபாத் சொல்ரான் ?— இப்போகூட பேஷ்மாட்டான் !— அச்சா ! மைதேக்தாஹு.— ஏ ! பீபி ! நீ என்ன சொல்ரே ? உன்கி தெரியும் ராணு ஒளிச்சிவைச்சி இருக்கிற வெடம் ? நீ சொன்ஞ உன்கி சும்மா உட்டேரான்—இல்லாப்போனு உன்கி சாம்நே ரண்வீர் தலெ வெட்டி போட்டு, உன்கி நம்ப ஜனுகு அனுப்பிச் சூடரான் !—சொல்லமாட்டே ? ஆனு பார்—

[கத்தியை உருவுகிறான், வெளியே தூரத்தில் கோயில் மணி ஓசை கேட்கிறது.]

ச. டைரோ ! ஷா இன்ஷா ! நான் சொல்லுகிறேன் !

ப. ஆ ! வழிகி வந்தே ! சொல் ஜல்தி !—

ச. பிராணநாத் ! ஏன் பயப்படுகிறீர்கள் ?— ஏகலிங்கன் கோயில் மணி சப்தம் கேட்கவில்லையா ?—ஷா இன்ஷா ! அதோ வடக்கு கோபுரவாயில் வெளியே—இடது பக்கமாய் ஒரு வழி போகிறதே— அந்த வழியாய்ப் போனால் —அதோ ஒரு குன்று தெரிகிறது பாருங்கள்—அந்த குன்றின் இடது பக்கத்தில்—ஒரு குகை யிருக்கிறது— இங்கிருந்து பார்த்தால் தெரியாது இப்படி வாருங்கள் காட்டுகிறேன்—

[கோட்டையின் மேல் அலங்கத்தில் ஏறுகிறாள்.]

அதோ பாருங்கள்—பிராணநாத்! அஞ்சாதீர்கள்! நான் முன்பு போகிறேன்! பிராணநாத்கி ஜெய்!

[அங்கிருந்து செங்குத்தாய் கீழே குதித் திறக்கிறாள்.]

மற்றவர். ஹா ஹா! தேகோ! தேகோ!—

[எல்லோரும் போய்ப் பார்க்கிறார்கள். இச் சமயம் ரணவீர் தன்னைக் காத்திருக்கும் சேவகர்கள் கையினின்றும் திமிறிக் கொண்டு, இடது கையால், கீழே விழுந்து கிடக்கும் தன் தாயாரின் கட்டாரியை எடுத்து ஜைனுலாப்தீன் மார்பில் குத்திவிடுகிறான்.]

ஜை. கூன்! கூன்! கூன்!

[கீழே வீழ்ந்திறக்கிறான், மஹம்மதியர்களெல்லாம் ரணவீரை கத்தியால் வெட்டுகிறார்கள்.]

ர. ராணாஜிகி ஜெய்! ஜெய் ஏகலிங்கா!

[வீழ்ந் திறக்கிறான்.]

ப. [ரணவீர் சிரசை உதைக்கப்போகும் ஒரு மஹம்மதியனைத் தடுத்து] மத்கரோ!— அச்சா ரஜ்புத்! இவனே ஷெரன்கி ஷெரன்! தன் ராணா கோசரம், மா, அவ்ரத், பேடா, தன் உசிர், எல்லாம் கொடுத்தா! இவன் நம்பள் எதிரியா யிருந்தாலும், செத்துப்போன பின்னே நம்பள்கி, சண்டையில்லெ, கோவம் இல்லெ, இப்டிபட்ட வேலெ செய்தா இண்ணு தில்மே சந்தோஷம் பண்ரா நம்பள்! இவன்கிபோலே நூறு பேர் என்கி இருந்தா, இந்த துனியா சோப் ஜெயிக்கிறான் ஒர் நிம்ஷத்லே! படா

சூரன்! படாசூரன்! இவன்கி ஒடலெ அப்டியே மர்யா தையோடே தூக்கிபொய் கொளுத்தி போடரான்!

[சேவகர்கள் ஒரு கூாஷ்டத்தைக் கொண்டு வந்து அதில் ரணவீர் உடலை வைக்கிறார்கள். பஹாதூர்ஷா தன் மேல் ஆடையால் சவத்தை மூடுகிறான். நான்கு பெயராக அவனைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். வணங்கிய முகத்துடன் பஹாதூர்ஷா முன்னாலும் மற்றவர் பின்னாலுமாகப் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

# அட்டவணை

## இந் நாடகத்தில் உபயோகித்துள்ள இந்துஸ்தானி பதங்கள்

| | இந்துஸ்தானி. | | தமிழ். |
|---|---|---|---|
| 1 | தீன் தீன்! | ... | மஹம்மதியர்கள் யுத்தம் புரியும் பொழுது உபயோகிக்கும் சப்தம்; தங்களுடைய மதத்தில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கையைக் குறிக்கும் |
| 2 | மாரோ மாரோ! | ... | ரஜபுத்ரர்களுடைய போர் ஒலி. அடி அடி! என்கிற பொருள் படும் |
| 3 | ஷாபாஷ்! | ... | நல்லது! |
| 4 | ரஹ்தோர் ராஜ்வாரா சோஹன் | ... | ரஜபுத்ர ஜாதிப் பிரிவுகள் |
| 5 | வஹ்வா! | ... | நேர்த்தி! |
| 6 | பவானிமாதா | ... | ரஜபுத்ரர்களுடைய குல தெய்வம் |
| 7 | பாக்ஜி | ... | ஓர் ரஜபுத்ரனுடைய பெயர் |
| 8 | பஜாவ்! | ... | வாசியுங்கள்! |
| 9 | அவ்சோஸ் | ... | ஐயோ! |
| 10 | ஏகலிங்கன் | .. | ராஜஸ்தானியில் முக்கியமான கோயிலின் சுவாமியின் பெயர் |
| 11 | சத்தி | ... | புருஷன் இறந்தவுடன் அக்னிப் பிரவேசமாகும் ஸ்திரீ |
| 12 | கர்ணவதி | ... | உடைசிங் ராணாவின் தாயாரின் பெயர் |

| | இந்துஸ்தானி. | | தமிழ். |
|---|---|---|---|
| 13 | ராம்தேவ் | ... | ஸ்ரீராமமூர்த்தி. (ரஜபுத்ரர்களில் அநேகர் சூர்ய வம்சத்தைச் சார்ந்தவர்கள் ) |
| 14 | நாநாஜி ! | ... | சிற்றப்பா ! |
| 15 | டீகா | ... | ராணுக்கள் முகத்தில் அணியும் சிகப்புப் பொட்டு |
| 16 | ஜோஹர் | ... | நடக்கும் யுத்தத்தில் இனி ஜெயிப்போம் என்னும் ஆசை போனவுடன் ரஜபுத்ர ஸ்திரீகளெல்லாம் அக்னிப் பிரவேசமாகிற ஓர் வழக்கம் |
| 17 | அக்னி குலம் | ... | க்ஷத்ரிய குலம் |
| 18 | மேவார் | ... | ரஜபுத்ர ஜாதிகளில் ஒன்று |
| 19 | பீடா | ... | வெற்றிலைச் சுருள் |
| 20 | லோகம்மே | ... | உலகத்தில் |
| 21 | படா | ... | பெரிசு |
| 22 | அவ்ரதாம் | ... | ஸ்திரீகள் |
| 23 | அங்கார்லே | ... | அக்கினியில் |
| 24 | காம் ஹை | ... | வேலையாயிருக்கிறது |
| 25 | ஷா இன்ஷா ! | ... | ராஜாதி ராஜனே ! |
| 26 | சாம்நே | ... | எதிரில் |
| 27 | ஜோஹுகும் | ... | உத்தரவு |
| 28 | சோடா ராணு | ... | சின்ன ராணு |
| 29 | கியா | ... | என்ன ? |
| 30 | தூஸ்ராபாத் | ... | வேறொரு வார்த்தை |
| 31 | மேரிபாத் தேகோ | ... | என் வார்த்தையைப் பார். |
| 32 | சுப்ரஹோ ! | ... | பேசாதிரு ! |
| 33 | ஹுஜுர் | ... | சந்நிதானம் |
| 34 | ராணுபக்லோ ! | ... | ராணுவைப் பிடித்துக்கொண்டோம் ! |

| | இந்துஸ்தானி. | | தமிழ். |
|---|---|---|---|
| 35 | சர்தார் | ... | சேனைத் தலைவன் |
| 36 | லே ஆவ் இதர் | ... | இங்கே கொண்டுவா |
| 37 | சலாம் கரோ பைலெ | ... | முன்பு வந்தனம் செய் |
| 38 | இன்கா நாம் கியா ? | ... | இவன் பெயர் என்ன ? |
| 39 | வைசாஹை ? | ... | அப்படியா யிருக்கிறது ? |
| 40 | ஓ புட்டி அவ்ரத்கு புலாகர் ஆவ் ஜல்தி | ... | அந்த கிழவியை அழைத்துக் கொண்டுவா சீக்கிரம் |
| 41 | தேகோ | ... | பார் |
| 42 | பீபி | ... | அம்மா |
| 43 | அந்தே | ... | குருடு |
| 44 | மா | ... | தாயார் |
| 45 | அச்சா ! | ... | சரி ! |
| 46 | அவ்ரத் | ... | ஸ்திரீ |
| 47 | யாஷ்முக் | ... | முக்காடு—முகத்தை மூடும் வஸ்திரம் |
| 48 | பிச்வா | ... | சிறு ஈட்டி |
| 49 | நஹி | ... | இல்லை. |
| 50 | தூஸ்ரா ரஸ்தா தேக்னு | | வேறு வழி பார்க்கவேணும் |
| 51 | ஆகிர் பாத் | ... | கடைசி வார்த்தை |
| 52 | மேரா ஜெனனைகி | ... | என் அந்தப்புரத்திற்கு |
| 53 | மை தேக்தாஹ | ... | நான் பார்க்கிறேன் |
| 54 | கூன் ! | ... | கொலை ! |
| 55 | பேடா | .. | பிள்ளை |
| 56 | மத்கரோ | ... | வேண்டாம், செய்யாதே |
| 57 | தில்மே | ... | மனதில் |
| 58 | துனியா சோப் | ... | உலக முழுவதும் |

Printed by Dowden & Co., at the "Peerless Press," Madras.